Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 2, June 2022** **E-ISSN: 2583-0481**

# Minor Women Characters in the Twin Epics

**Dr. M.R.Majitha Burvin,** Assistant Professor of Tamil, Sadakathullah Appa College, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0481-8400**
**DOI: 10.5281/zenodo.6790986**

## Abstract

*In Tamil literature, 'Silapathikaram' and 'Manimegalai' are considered Twin epics. Each of the characters in the Twin epics is instrumental in developing the story. Much emphasis has been placed on the female characters when it comes to epics. The characters created by the Ilangoadigal and Seelthalai Sattanar have a very special place. Their characters speak various themes in the works. Religious concepts, People's lifestyles, cultures, rituals, beliefs, dreams, divination, etc are the messages conveyed through the characters. Various matters related to life are discussed through the characters in the twin epics. The author of the epic takes the country, language, religion, and people to the world through these characters. Everyone from Kaundiyadigal to Vayandamalai plays a very important role. The author of the epic has created a high level of secondary women in the Twin epics.*

**Keywords:** *Silappathikaram*, Secondary Women Characters, Twin Epics.

## References

[1] Subramanian, S.W. *Silappathikaram*, Meyyappan Publishing, 2009.
[2] Narayana, Velupillai, M. *Silambum Meghalaiyum*. Anbu Publications, Chennai.1985.
[3] Meenakshi Sundaram, Ka. *The Role and Character in Silambu*. Rukmini - Ramanathan Foundation, 2007
[4] Muthiah.K. *A New Perspective on Tamil Literature*. Bharathi Library Chennai. 2013.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 2, ஆனி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481


# இரட்டைக் காப்பியங்களில் பெண் துணைமைக்கதாப்பாத்திரங்கள்


**முனைவர் மு.ரா.மஜிதா பர்வின்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0003-0481-8400



**DOI: 10.5281/zenodo.6790986**



**ஆய்வுச்சாரம்**

*இரட்டைக் காப்பியங்களில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் கதையை வளர்த்துக்கொண்டு செல்வதற்கு உறுதுணையாய் அமைந்துள்ளது. காப்பியங்களைப் பொறுத்தவரையில் பெண் கதாப்பத்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இளங்கோவடிகளாலும் சீத்தலைச் சாத்தனாராலும் உருவாக்கப்பட்ட பாத்திரங்கள் அனைத்தும் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. பாத்திரங்கள் பேசுகின்ற இடங்கள் பாத்திரங்களின் வாயிலாக சொல்லப்படும் செய்திகள் சமயக் கருத்தாடல்கள் மக்களின் வாழ்வியல் முறைகள் சமயம், பண்பாடு, சடங்குமுறைகள், நம்பிக்கைகள், கனவுகள், சகுனம் பார்த்தல் முதலிய பல்வேறு விஷயங்கள் இரட்டைக் காப்பியங்களில் பேசப்பட்டுள்ளது. நாடு, மொழி, சமயம், மக்கள் உள்ளிட்ட அனைத்தையும் இக்கதாபாத்திரங்களின் வழியாக உலகிற்கு எடுத்துச் சொல்கிறார் காப்பிய ஆசிரியர். கவுந்தியடிகள் தொடங்கி வயந்தமாலை வரையில் அனைவருமே மிக முக்கியப் பங்காற்றுகின்றனர். இரட்டைக்காப்பியத்தைப் பொறுத்த வரையில் பெண்களை உயர்வாகத்தான் காப்பிய ஆசிரியர் படைத்திருக்கிறார்.*



**திறவுச்சொற்கள்:** சிலப்பதிகாரம், கவுந்தியடிகள், வயந்தமாலை, நாடு, மொழி, சமயம்.


## முன்னுரை

தமிழ்மொழி தோன்றிய காலம்தொட்டே இலக்கியங்களும் தோன்ற ஆரம்பித்து விட்டது. சங்க இலக்கிய காலத்திற்கு பின்பு உருவான இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கது காப்பியங்கள். காரணம் என்னவென்றால் கடவுளையோ மன்னர்களையோ பாடாமல் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி போன்ற காப்பியங்கள் சாதாரண மக்களை கதாமாந்தர்களாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. பெண்களை நேர்மறையாகவும் எதிர்மறையாக காப்பியங்கள் வெளிப்படுத்துகின்றன. பெண்களை உயர்வாகவும் வீரமிக்கவர்களாகவும் உறுதி மிக்கவர்களாகவும் காட்டுகின்றன. அதேசமயத்தில் பெண்புத்தி பின்புத்தி என்ற மனோபாவம் கொண்டவளாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். நாணயத்தின் இரண்டு பக்கத்தைப் போன்று எல்லா மனிதர்களிடமும் நல்ல குணங்களும் இருக்கும் கெட்ட குணங்களும் இருக்கும். மனிதன் தனது வாழ்க்கையில் எடுக்கும் முடிவுகள் நன்மையிலும் முடியும். தீமையிலும் முடியும். அது காலத்தின் கட்டாயம். காப்பியப் பெண்கள் தங்கள்

இருப்பை நிலைநிறுத்த தனது காத்திரப்பங்களின் வழி எவ்வாறு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்களின் முக்கியத்துவம் என்னவென்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**துணைமை மாந்தர்கள் - விளக்கம்**

காப்பியம் என்பது தனியொருவரின் கதையினைக் கூறினாலும் அதன் வழியாக சமூகத்தையும் அதன் பண்பாட்டு படிநிலைகளையும் எடுத்தியம்புகிறது. தனி மனித வாழ்க்கையை விவரிப்பதோடு அந்தச் சமூகத்தினரில் வாழ்வியல் முறையையும் எடுத்துரைக்கிறது. உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்ட தலைவன் அல்லது தலைவியைச் சுற்றி அக்குறிக்கோளை அடையப் பல நிலைகளில் உறுதுணையாக நிற்பவர்கள் துணைமைக் கதாமாந்தர்கள்.

இலக்கியத்தில் தலைவன் தலைவி ஆகிய இருவரும் தலைமை மாந்தராக இருப்பதற்கும் அவர்களின் சிறப்பை விளக்கிக் காட்டுவதற்கும் காப்பிய நிகழ்வுகள் படைக்கப்பட்டிருக்கின்றன. துணைமை மாந்தர்களைக் காப்பியத்தில் அமைத்து அவற்றின் இயல்புக்கேற்றவாறு அக்கதாபாத்திரமானது படிப்பவர் மனதைக் கவர வேண்டும். இம்மாந்தர்கள் காப்பியத்தில் கதை நிகழ்வோடு தொடர்புள்ளவர்களாகவும் தலைமை மாந்தரை மேம்படுத்துபவர்களாகவும் பண்பினை வெளிப்படுத்துபவர்களாகவும் கட்டமைக்கப் படுகின்றனர். இரட்டைக்காப்பியத்தில் பெண் துணைமை மாந்தர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

- தேவந்தி, மாதிரி, ஐயை, சாலினி, கவுந்தியடிகள், கோப்பெருந்தேவி - சிலப்பதிகாரத்தில் வரும் துணைமைக் கதாமாந்தர்கள்.
- சுதமதி, காயச்சண்டிகை, அறவணடிகள், இராசமாதேவி - மணிமேகலையில் வரும் துணைமைக் கதாமாந்தர்கள்.
- வயந்தமாலை - இரண்டு காப்பியத்திலும் வரும் துணைமைக் கதாமாந்தர்.

இரட்டைக் காப்பியங்களில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் கதையை வளர்த்துக்கொண்டு செல்வதற்கு உறுதுணையாய் அமைந்துள்ளது. காப்பியங்களைப் பொறுத்தவரையில் பெண் கதாப்பத்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இளங்கோவடிகளாலும் சீத்தலைச் சாத்தனாராலும் உருவாக்கப்பட்ட பாத்திரங்கள் அனைத்தும் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. பாத்திரங்கள் பேசுகின்ற இடங்கள் பாத்திரங்களின் வாயிலாக சொல்லப்படும் செய்திகள் சமயக் கருத்தாடல்கள் மக்களின் வாழ்வியல் முறைகள் சமயம், பண்பாடு, சடங்குமுறைகள், நம்பிக்கைகள், கனவுகள், சகுனம் பார்த்தல் முதலிய பல்வேறு விஷயங்கள் இரட்டைக் காப்பியங்களில் பேசப்பட்டுள்ளது. நாடு, மொழி, சமயம், மக்கள் உள்ளிட்ட அனைத்தையும் இக்கதாபாத்திரங்களின் வழியாக உலகிற்கு எடுத்துச் சொல்கிறார் காப்பிய ஆசிரியர். கவுந்தியடிகள் தொடங்கி வயந்தமாலை வரையில் அனைவருமே மிக முக்கியப் பங்காற்றுகின்றனர். இரட்டைக்காப்பியத்தைப் பொறுத்த வரையில் பெண்களை உயர்வாகத்தான் காப்பிய ஆசிரியர் படைத்திருக்கிறார். கணிகையர்

குலத்தில் பிறந்த மாதவியும் கற்புடை பெண்டிர்போல் வாழ முனைந்ததையும் மணிமேகலை கணிகையர் தொழில் செய்யாமல் துறவறம் ஏற்று அறவழி பேணியதும், அதற்காக அவர்கள் இருவரும் வாழ்வில் அனுபவித்த இன்னல்களையும் காப்பிய ஆசிரியர் விளக்கியிருக்கிறார். கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகிய மூன்று கதாபாத்திரங்களும் மிகச் சரியாக இயங்குவதற்கு துணைக் கதாபாத்திரங்கள்தான் பெரும்பாங்காற்றியிருக்கின்றன. எனவே காப்பியங்களில் பெண் துணைமைக் கதாபாத்திரங்களின் பணியும் பங்கும் மிகவும் இன்றியமையாதது.

**தேவந்தி**

சிலப்பதிகாரத்தில் கனாத்திறம் உரைத்த காதையில் தேவந்தி கண்ணகியின் தோழியாகக் காப்பிய ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். கண்ணகியும் தேவந்தியும் எந்த சூழ்நிலையில் தோழியானார்கள் என்பதைக் காப்பியத்தில் ஆசிரியர் குறிப்பிடவில்லை. கோவலன் கண்ணகி மகிழ்ச்சியான வாழ்க்கையின் போது தேவந்தி பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. கோவலன் கண்ணகி பிரிந்து சென்றப் பிறகு கண்ணகிக்குத் தோழியாக இருப்பதாகக் கதை புனைந்துள்ளார். தேவந்தியை அறிமுகப்படுத்தும்போது பாசண்டசாத்தன் மனைவி என்று அறிமுகம் செய்வதை கீழ்க்கண்ட பாடல் மூலம் அறியலாம்.

**தேவந்தி என்பாள் மனைவி அவளுக்குப்**
**பூந்த உண்கண் பொறுக்கொன்று மேவித்தன்**
**மூவா இளநலங் காட்டிஎம் கோட்டத்து**
**நீவா வெனவுரைத்து நீங்குதலும் (சிலம்பு. 9 : 34-36)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன. தேவந்தி தன் உள்ளத்திலே ஒன்றியிருந்த கணவன் பிரிந்துபோக மீண்டும் தன்னுடன் இணைய வேண்டும் என்று புனித நீராடல் செய்தாள். அப்புனித நீராடலைச் செய்யும்போது கண்ணகியின் நிலையை நினைத்து அவள் இருக்கும் இடத்திற்குச் சென்று கோவலன் பிரிந்து சென்றதற்கு வருந்தி அவன் மீண்டும் உன்னுடன் ஒன்று சேர வேண்டும். அதற்கு அறுகம்புல் சிறுபூ, நெல் முதலியவற்றை தூவி 'கண்ணகி நீயும் பிரிந்த உன் கணவனைப் பெறுவாய்' என்று வாழ்த்துகிறாள். இவ்விடத்தில் தன் தோழியின் துன்பத்தைக் கண்டு அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றுவதாக தேவந்தியின் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை, **தேவந்தியின் படைப்பு கண்ணகியின் நோக்கம் இயல்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கு ஏற்றதாய் அமைந்துள்ளது.(சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும்.,2007:158)** க.மீனாட்சி சுந்தரம் தமது நூலில் கூறுகிறார்.

வாழ்த்துக் காதையிலும் தேவந்தியைப் பற்றிய செய்தியை ஆசிரியர் பதிவு செய்கிறார். கண்ணகியைக் காண கண்ணகியின் செவிலித்தாய், தோழி, தேவந்தி ஆகிய மூவரும் வருகின்றனர். அக்காதையில் செங்குட்டுவனிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்தும்போது கண்ணகியின் பெருமையைக் கூறி அவளுடைய தோழி நான் என்று கூறுவதை,

**முடி மன்னர் மூவருங் காத்தோம்பித் தெய்வ**

**வடபே ரிமய மலையிற் பிறந்து**
**கடுவரற்கங்கைப்புனலாடிப்போந்**
**தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்**
**சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர் (சிலம்பு. 29 : 5 )**

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன. தேவந்தி என்ற பாத்திரம் கண்ணகியின் பெருமைகளையும் பண்பையும் கூறித் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதாக இவ்விடத்தில் ஆசிரியர் காட்டுகிறார். தேவந்தியிடம் கண்ணகி தான் கண்ட கனவு பற்றிக் கனாத்திறம் உரைத்தக் காதையில் கூறுகின்றாள். அக்கனவை தான் பழித்தற்கு வருந்தி வாழ்த்துக் காதையில் புலம்புகிறாள். மேலும் மாதவி மணிமேகலை ஆகியோர் துறவு வாழ்வு பற்றி வரம் தருங்காதையில் தேவந்தி சேரமன்னன் செங்குட்டுவனிடம் கூறுவதாக ஆசிரியர் படைத்துள்ளார்.

**மாதரி**

அடைக்கலக் காதையில் கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரையை நோக்கிச் செல்கின்றனர். கோவலன் நாங்கள் மதுரைக்கு சென்று வாழ்க்கையைத் துவங்க இருக்கிறோம். அங்கு கண்ணகிக்கு ஒரு பாதுகாப்பான இடம் தேவை என்று கவுந்தியடிகளிடம் கூறுகின்றான். அப்பொழுதான் காப்பிய ஆசிரியர் மாதரியைப் பற்றிக் கூறுகிறார். தரும சிந்தனை உடைய துறவியர் நிலைத்து வாழும் புறஞ்சேரிப்பகுதியில் உள்ள பூப்போலும் கண்ணுடைய இயக்கி என்னும் பெண் தெய்வத்துக்கு பால்சோறு படையல் செய்து விட்டுத் திரும்பும் இடையர்குல மூதாட்டியான மாதிரி என்பவள் எதிர்வந்த கவுந்தியடிகளை வணங்குவதாகக் காட்டுகிறார். மாதரியைப் பற்றி கோவலன் கண்ணகியிடம் கவுந்தியடிகள் எடுத்துக் கூறுகிறார். பசுக்களைக் காத்துப் பராமரித்து அவைதரும் பயனைப் பெற்ற பிறகு பிறருக்குத் தந்து உதவி செய்து வாழும் இடையர்குல மக்களின் வாழ்க்கை இனிதானது. ஓர் தீமையும் இல்லாதது. எனவே இந்த மாதரியும் தீயவளல்ல. நல்லவளே! வயதில் மூத்தவளான இவள் அன்பும் கருணையும் உடையவளாகவும் தெரிகிறாள். எனவே மாதரியின் பாதுகாப்பில் கண்ணகியை விடலாம் என்று கூறுகிறார். மேலும் இவ்விடத்தில் கண்ணகியின் பெருமையும் வணிகர் குலப்பெருமையும் மாதரிப் பாத்திரத்தின் வாயிலாகப் பேசப்படுகிறது. கண்ணகியை அடைக்கலப் பொருளாகப் பெற்றதற்கு மகிழ்ந்து அவளைத் தன் மகள் போல் பேணிக் காக்கிறாள். மாதரியாகிய முதுமகளுக்கு கோவலன் யார் என்று தெரியாது. மேலும் கண்ணகிக்கு ஏற்பட்டத் துன்பத்திற்கு வருந்துபவளாகவும் அத்துன்பம் தன்னால்தான் ஏற்பட்டது என்று எண்ணி இரந்த நிலையும் சிலப்பதிகார நீர்படைக்காதையில் மாடல மறையோன் கூற்று வாயிலாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**ஐயை**

ஐயை மாதரியின் மகள் ஆவாள். அடைக்கலக் காதையில் கண்ணகிக்கு உதவி செய்ய மாதரி ஐயை அனுப்பி வைப்பதாக ஆசிரியர் காட்டுகிறார். ஐயையை கண்ணகிக்கு 'நாத்தூண்'

என்ற உறவு முறையுடன் அழைத்ததாக காட்டப்பட்டுள்ளது. கண்ணகியின் துன்பத்திற்குத் தானும் ஒரு காரணம் என்று எண்ணி வருந்திய செய்தியை நீர்படைக்காதையின் வழி அறிய முடிகிறது.

**சாலினி**

வேட்டுவ வரியில் 'சாலினி' என்ற கதாபாத்திரத்தை அறிமுகம் செய்கிறார். சாலினியை கொற்றவை போல் அலங்காரம் செய்து வைக்கின்றனர். அவள் மறவர்களுக்கு அருள்மொழிகளைக் கூறுகிறாள். அப்படிக் கூறிக் கொண்டிருக்கும்பொழுது கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் அங்கு வருகின்றனர். அப்போது கொற்றவை தோற்றத்தில் இருந்த சாலினி கணவனோடு அங்கே இருந்த கண்ணகியைச் சுட்டி மணம் நிறைந்த கூந்தலை உடைய இந்தப்பெண் கொங்கு நாட்டின் செல்வம் ஆவாள். இவள் குடமலை ஆளும் தலைவி தென் தமிழ் நாட்டுப்பெண் உலகு செய்த தவத்தால் தோன்றியவள். 'இவ்வுலகுக்கு ஒளி தரவந்த மாணிக்கம் போன்ற உயர்ந்த திருமகள்' இந்தப் பெண்மணி என்று கூறுகிறாள். இவள் கூற்றிலிருந்து கண்ணகி பிற்காலத்தில் தெய்வத்துள் தெய்வமாக வைக்கப்படுவாள் என்பதை இலைமறைகாயாக இப்பாத்திரத்தின் வழி காப்பிய ஆசிரியர் எடுத்தியம்புகிறார். இச்செய்தியை முனைவர் க.மீனாட்சி சுந்தரம் தம் நூலில் கூறும்பொழுது, **தெய்வமாகப் போகும் கண்ணகியை ஒரு தெய்வமேறிய பெண் சுட்டிக் காட்டுகிறாள். இது நம் உள்ளத்தைப் படிப்படியே பக்குவப்படுத்துவதற்கு நல்ல வழியாம். (சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும்., 2007:233)** என்கிறார். இப்பாத்திரம் கண்ணகியின் எதிர்காலத்தை முன்கூட்டியே உலகிற்கு எடுத்துரைப்பதற்காக படைக்கப்பட்ட பாத்திரமாகும்.

**கவுந்தியடிகள்**

கவுந்தியடிகள் ஒரு சமணத்துறவி ஆவார். பல சமண சமயக் கருத்துக்களை இவர் கூற்றின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். இளங்கோவடிகளால் படைக்கப்பட்ட பாத்திரங்களுள் கவுந்தியடிகள் சிறந்த அறிவு நலம் வாய்ந்தவர். கவுந்தியடிகள் பாத்திரம் நாடுகாண் காதையில் அறிமுகப்படுத்துகிறார். கோவலன் கண்ணகி மதுரை செல்லும்போது வழித்துணையாக வருகிறார் அப்பொழுது அவருடைய சமண சமய பற்றும் ஈடுபாடும் எடுத்து கூறப்படுகின்றன. கண்ணகியின் தன்மை மென்மை ஆகியவை கவுந்தியடிகள் கூற்று வாயிலாக காப்பியத்தில் வெளிப்படுகின்றன. சரளா இராசகோபலன், **கவுந்தியடிகளை வழித்துணை என்ற அளவோடு நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் கவுந்தியடிகள் கதைத் தலைவன் தலைவியரின் வாழ்க்கையோடு இணைந்தது மட்டுமின்றி அவர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து விடுகின்ற தன்மையினைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். (தமிழ் இலக்கியம்; ஒரு புதிய பார்வை., 2013:97 )** தம் நூலில் கூறியுள்ளார்.

கோவலன் கண்ணகி ஆகியோரின் துன்பத்தை எண்ணி வருந்தி உண்ணா நோன்பு இருந்து உயிர் துறந்ததாக நீர்படைக் காதையில் மாடலமறையோன் சேரமன்னனிடம் கூறுவதாகக் காட்டுகிறார். கவுந்தியடிகள் சிலப்பதிகாரத்தோடு பின்னிப் பிணைந்து சமண

சமயக் கருத்துக்களை வெளிப்படுத்துவதை மறைமுகமாக இளங்கோவடிகளால் வெளிப்படுத்தப்படுகிறது.

**கோப்பெருந்தேவி**

பாண்டிய மன்னன் மனைவி கோப்பெருந்தேவி ஆவாள். தன் கணவன் பிழை செய்ததை எண்ணி தன் கணவன் இறந்தவுடன் தானும் இறப்பதுதான் சரி என எண்ணி உயிரைப் பிரித்தவள். இவளுடைய பாத்திரப்படைப்பில் ஆசிரியர் கற்புடைய பெண்களின் தன்மையைக் காட்டுகிறார். மேலும் எம். நாராயண வேலுப்பிள்ளை தம் நூலில், **மங்கையரின் மாசு மறுவற்ற பெண்மையின் தன்மையை மன்பதையில் நிலைநாட்டியவர் அப்பெருமாட்டி (சிலம்பும் மேகலையும்., 1985:46)** என்று கூறுகிறார். கோப்பெருந்தேவியை மிக உயர்வாக கூறியிருக்கிறார். கற்புடை பெண்டீரின் மற்றொரு வகை கணவனோடு உயிர் துறப்பது என்று கூறுகின்றனர்.

**சுதமதி**

மணிமேகலையின் தோழி சுதமதி என்பவள். இவளின் கூற்றுகள் மலர்வனம் புக்ககாதையில் ஆசிரியரால் வெளிப்படுகிறது. மணிமேகலையை நல்வழிப்படுத்தி அறவழியில் செல்வதற்குச் சுதமதியின் பங்கு மணிமேகலைக் காப்பியத்தில் இன்றியமையாததாக உள்ளது. சுதமதி உதயகுமரனிடம் உடம்பின் நிலையாமையை எடுத்துக் கூறியும் மணிமேகலையின் மீது உதயகுமரன் கொண்டுள்ள காதல் தவறு என்பதையும் எடுத்துக்காட்டும் பாத்திரமாக அமைக்கப்பட்டுள்ளது. மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்தீவிற்கு எடுத்துச் சென்றதற்குத் தன் உயிரை பிரிந்ததாக எண்ணி வருந்துபவளாக சுதமதி காணப்படுகிறாள் இதிலிருந்து மணிமேகலையிடம் சுதமதி கொண்ட நட்பின் ஆழத்தை ஆசிரியர் உணர்த்துகிறார். முற்பிறவில் மாதவி மணிமேகலை ஆகியோர் தன் சகோதரிகள் என்று எண்ணி துறவு வாழ்க்கையில் அவர்களுடன் சேர்ந்தே இருப்பதாக காஞ்சிமாநகர் புக்க காதையில் படைத்துள்ளார்.

**காயச்சண்டிகை**

காயச்சண்டிகை காஞ்சனன் மனைவி இவள் விருச்சக முனிவனின் சாபத்தால் ‘யானைப் பசி’ என்பதனைப் பெற்றாள். ஐயை பாத்திரத்தில் கற்புடைய பெண்கள் இடும் உணவைத்தான் முதலில் ஏற்க வேண்டும் என்று காயச்சண்டிகை கூறி மணிமேகலைக்குக் கற்பில் மேம்பட்ட ஆதிரையைக் காட்டி அவளிடம் ஐயைப்பாத்திரத்தில் உணவு பெறச் செய்கிறாள். பின்பு மணிமேகலை இட்ட உணவில் யானைப் பசி நீங்கியவளாக அவளிடத்திற்குச் செல்கிறாள்.

**அறவணடிகள்**

அறவணடிகள் ஒரு பௌத்தத் துறவி. மணிமேகலைக் காப்பியம் முழுவதும் பௌத்தக் கருத்துக்கள் இவருடைய கூற்றிலிருந்து வெளிப்படுகிறது. மணிமேகலைக்கு அறவுரைக் கூறியும் மணிமேகலை நெறிதவறும் இடங்களில் அறிவுரைக் கூறியும் வழிநடத்திச் செல்பவராகக் காப்பியம் முழுவதும் காட்டப்படுகிறது. அறவணடிகள் கூற்றில் ஆபுத்திரன்

வரலாறு அட்சய பாத்திரத்திரன் வரலாறு ஆகியவை ஆசிரியரால் வெளிப்படுத்தப்படுகிறது. இறுதியில் மணிமேகலைக்கு அறவுரை கூறி துறவு ஏற்கவும் செய்கிறார். இருவருடைய கூற்றின் வழியாக பௌத்தமதக் கருத்துக்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**இராசமாதேவி**

மாவண்கிள்ளியின் மனைவியும் உதயகுமரனின் தாயுமானவள் இராசமாதேவி. இவள் தன் மகன் உதயகுமரன் இறந்ததற்கு மணிமேகலைதான் காரணம் என்று எண்ணி அவளை பல நிலைகளில் கொடுமை செய்கிறாள். மணிமேகலையின் தவத்தன்மையை அறிந்து இராசமாதேவி தான் செய்தது தவறு என்று எண்ணி மணிமேகலையிடம் வருந்துகிறாள். இராசமாதேவிக்கு மணிமேகலை உடம்பின் நிலையாமையை எடுத்துக்கூறியும் சில அறவுரைகளையும் எடுத்து கூறியும் அவளை அறநெறியில் செல்ல வழிக்காட்டுகிறாள்.

**வயந்தமாலை**

வயந்தமாலை பற்றிய செய்திகளை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையிலும் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தில் ஊரலருரைத்த காதையிலும் குறிப்பிட்டுள்ளார். வயந்தமாலை மாதவியின் தோழி ஆவாள். மாதவியின் பண்புகள் வெளிப்படுத்துவதற்கு முக்கியக் கருவியாக வயந்தமாலை சிலப்பதிகாரத்தில் படைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. மாதவி கோவலன் ஆகியோரின் வருத்தத்தைப் போக்குபவளாகவும் அவர்கள் சேர்ந்து வாழ பல வழிகளில் முயற்சி செய்பவளாகவும் இளங்கோவடிகளால் காட்டப்படுகிறாள். வேனிற்காதையில் கோவலன் மாதவியைப் பற்றி பழித்துரைத்த போதும் மிகவும் பொறுமையுடன் காணப்படுவதாகப் படைக்கப்பட்டுள்ளாள். மாதவி கோவலன் ஆகியோரின் பிரிவு துயரத்திற்கு வருந்துபவளாகவும் காணப்படுகியாள்.

மணிமேகலைக் காப்பியத்தில் வயந்தமாலை இந்திரவிழா நடைபெறும் பொழுது மாதவியும் மணிமேகலையும் வராததை எண்ணி வருந்தி வயந்தமாலை அவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்கிறாள். மாதவி தன் காதல் கணவன் கோவலன் பற்றியும் கண்ணகி கோவலன் இறந்தது பற்றியும் கூறி வருந்துகிறாள். அவளுடைய வருத்தத்தைப் போக்கி ஆறுதல் மொழிகளைக் கூறுபவளாக ஊரலருரைத்த காதை மலர்வனம்புக்கக் காதை ஆகியவற்றில் வயந்தமாலை பாத்திரத்தைச் சீத்தலைச் சாத்தனர் படைத்துள்ளார்.

**முடிவுரை**

இரட்டைக்காப்பியங்களில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்களின் படைப்புகள் அனைத்தும் மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் கதாபாத்திரம் வெளிப்படுத்தக்கூடிய உறுதுணையாக நிற்கக்கூடிய அனைத்து பண்புகளும் நிரம்பப் பெற்றுள்ளது கூடுதல் சிறப்பு. காப்பியங்கள் அனைத்தும் பெண்களை மையமிட்டே புனையப்பட்டுள்ளன. முக்கியமாக பெண்களுக்கான முக்கியத்துவம் பொறுப்பும் கடமையும் தியாக உணர்வும் உதவும் மனப்பான்மையும் மேலோங்கி இருந்திருக்கிறது என்பதை துணைமை பெண் கதாமாந்தர்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**

[1] சுப்பிரமணியன் ச.வே. *சிலப்பதிகாரம்.* மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2009.

[2] நாராயண வேலுப்பிள்ளை எம். *சிலம்பும் மேகலையும்.* அன்பு பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1985.

[3] மீனாட்சிசுந்தரம், கா. *சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும்.* ருக்மணி - இராமநாதன் அறக்கட்டளை, 2007.

[4] முத்தையா.கே. *தமிழ் இலக்கியம் ஒரு புதிய பார்வை.* பாரதி புத்தகாலயம், சென்னை, 2013.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.